COMMISSIONER OF MUNICIPAL ADMINISTRATION, CHEPAUK, CHENNAI-5
25 SEP 2013

சுருக்கம்

நிலம் – நாமக்கல் நகராட்சி – நாமக்கல் நகராட்சிக்குட்பட்ட கணேசபுரம், டி பிளாக், எண். 18 நகரளவை எண்கள் 6/2, 6/3, 6/4, 6/7 மற்றும் 6/8 ஆகிய புல எண்கள் உள்ள நிலங்களில் மொத்தம் 3541–1/2 சதுர அடி புஞ்சை நிலத்தினை நாமக்கல் நகராட்சியின் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு குழாய்கள் பதிக்க தனியார் நில உரிமைதாரர்களிடமிருந்து பேச்சுவார்த்தை மூலம் நில எடுப்பு செய்யவும், அதற்கான நிலக்கிரையத் தொகையினை நகராட்சியின் பொது நிதியிலிருந்து நில உரிமையாளர்களுக்கு வழங்கவும் நிர்வாக அனுமதி அளித்து ஆணை வெளியிடப்பட்டது – கூடுதல் இழப்பீட்டுத் தொகை ரூ.9,38,498/–ஐ நிலக்கிரையம் செய்து கொடுத்த தனியார் நில உரிமைதாரர்களுக்கு நகராட்சியின் பொது நிதியிலிருந்து வழங்க நாமக்கல் நகராட்சிக்கு அனுமதி வழங்கி ஆணை – வெளியிடப்படுகிறது.

---

நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (நநி.5) துறை

அரசாணை (நிலை) எண். 142

நாள்: 23.09.2013
விஜய, புரட்டாசி–7
திருவள்ளுவராண்டு–2044

படிக்க:–

1. அரசாணை (நிலை) எண்.73, நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, நாள் 01.08.2012.
2. நகராட்சி நிர்வாக ஆணையரின் கடித ந.க.எண்.43618/2011 /டிபி4, நாள் 15.05.2013.

*****

ஆணை:–

மேலே முதலாவதாகப் படிக்கப்பட்ட அரசாணையில், நாமக்கல் மாவட்டம் மற்றும் வட்டம், நாமக்கல் நகராட்சி கணேசபுரம் வார்டு, டி பிளாக், எண்.18 நகரளவை எண்கள் 6/2, 6/3, 6/4, 6/7 மற்றும் 6/8 ஆகிய புல எண்கள் உள்ள நிலங்களில் மொத்தம் 3541–1/2 சதுர அடி புன்செய் நிலத்தினை நாமக்கல் நகராட்சியின் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு குழாய்கள் பதிக்க தனியார் பேச்சுவார்த்தை மூலம் சதுர அடி ஒன்றுக்கு ரூ.750/– வீதம் ரூ.26,56,125/– மதிப்பீட்டுத் தொகையில், நில எடுப்பு செய்யவும், மேற்படி தொகையினை நகராட்சியின் பொது நிதியிலிருந்து நில உரிமையாளர்களுக்கு வழங்கவும், நிர்வாக அனுமதி அளிக்கப்பட்டது.

2. மேலே இரண்டவதாகப் படிக்கப்பட்ட தமது கடிதத்தில், நகராட்சி நிர்வாக ஆணையர் 12.12.2012–ம் நாளிட்ட தமது கடிதம் மூலம், உலக வங்கியின் அறிவுரைப்படி நகராட்சிக்கு நிலக் கிரையம் செய்து கொடுத்த தனியார் உரிமைதாரர்களுக்குக் கூடுதலாக ஈடுகட்டும் தொகை வழங்கப்பட வேண்டுமென நாமக்கல் நகராட்சி ஆணையருக்குத் தெரிவிக்கப்பட்டதெனவும், அதனடிப்படையில், நாமக்கல் நகராட்சி ஆணையர் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை, அரசாணை எண்.115, நாள் 06.10.2006–ன் இணைப்பு – பத்தி 4(10)(e)–ன்படி நிலம்

த.பி.பா.,

கையகப்படுத்தும்போது மேற்கொள்ள வேண்டிய வழிகாட்டி நெறிமுறைகளின்படி கீழ்க்காணும் கிரையத் தொகை வழங்கப்பட வேண்டும் எனத் தெரிவித்து, தமது கருத்துருவை நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர், சேலம் வழியாக மேல் அனுப்பியுள்ளார் எனக் குறிப்பிட்டுள்ளார்:–

| | | |
|---|---|---|
| வழிகாட்டி மதிப்பு நிர்ணயம் செய்த தேதி | : | 01.08.2007 முதல் |
| தனியார் பேச்சு வார்த்தையில் நிலம் வழங்க ஒப்புக்கொண்ட தேதி | : | 05.06.2011 |
| 01.08.2007 முதல் வழிகாட்டி (சதுர அடி ஒன்றுக்கு) | : | ரூ.500/– |

அரசாணையின்படி வழங்க வேண்டிய 5 சதவீதம் கூடுதல் (ஒவ்வொரு ஆண்டிற்கும்)

| | | |
|---|---|---|
| 01.08.2007 முதல் 31.07.2008 வரை | – | கூடுதல் இல்லை |
| 01.08.2008 முதல் 31.07.2009 வரை | – | கூடுதல் 5% |
| 01.08.2009 முதல் 31.07.2010 வரை | – | கூடுதல் 5% |
| 01.08.2010 முதல் 31.07.2011 வரை | – | கூடுதல் 5% |
| மொத்தம் | – | 15% கூடுதல் |
| வழிகாட்டி மதிப்பு (சதுர அடி ஒன்றுக்கு) | – | ரூ.500/– |
| கூடுதல் 15% | – | ரூ. 75/– |
| மொத்தம் | – | ரூ.575/– |
| அரசாணையின்படி 50% கூடுதல் (சதுர அடி ஒன்றுக்கு) | – | ரூ.287.50 |
| மொத்தம் | – | 862.50 |
| முத்திரைத்தாள் கட்டணம் மற்றும் பதிவு கட்டணம் (7% + 1% = 8%) | – | ரூ.69.00 |
| | – | ரூ.931.50 |
| ஒரு வருடத்திற்கு 12% வீதம் வட்டி 9 மாதங்களுக்கு | – | ரூ. 83.83 |
| | | ரூ.1015.35 |

ஏற்கனவே வழங்கப்பட்ட சதுர அடிக்கான ரூ.750/– போக மீதம் வழங்க வேண்டிய தொகை ரூ.265/– வீதம் 3541.1/2 சதுர அடிக்கு வழங்க வேண்டிய தொகை ரூ.9,38,498/–.

3. மேற்குறிப்பிட்ட தொகையினை நில உரிமையாளர்களுக்கு வழங்க நகராட்சி நிர்வாக ஆணையரின் மூலம் திருத்திய நிர்வாக அனுமதி பெறவும், இத்தொகையினை நகராட்சி நிதியிலிருந்து வழங்கவும், நாமக்கல் நகர்மன்றத் தீர்மானம் எண்.929, நாள் 27.02.2013–ல் ஒப்புதல் வழங்கியுள்ளது என்றும், எனவே, மேற்குறிப்பிட்ட கூடுதல் தொகை ரூ.9,38,498/–ஐ நகராட்சியின்

பொது நிதியிலிருந்து வழங்க நகராட்சி நிர்வாக ஆணையரின் அனுமதி கோரி மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், சேலம் வழியாகப் பெற்ற கருத்துருவினை தக்க பரிந்துரையுடன் நகராட்சி நிர்வாக ஆணையர் அரசுக்கு அனுப்பியுள்ளார்.

4. நகராட்சி நிர்வாக ஆணையரின் பரிந்துரையினை அரசு கவனமுடன் ஆய்வு செய்தது. ஆய்வுக்குப்பின், நாமக்கல் நகராட்சியில் பாதாள சாக்கடைத் திட்டத்திற்கு குழாய்கள் பதிப்பதற்கு உலக வங்கியின் அறிவுரைப்படி, நகராட்சிக்கு நிலக்கிரையம் செய்து கொடுத்த தனியார் உரிமைதாரர்களுக்கு கூடுதலாக ஈடுகட்டும் தொகை ரூ.9,38,498/–ஐ நகராட்சியின் பொது நிதியிலிருந்து வழங்க அனுமதி வழங்கி அரசு ஆணையிடுகிறது.

(ஆளுநரின் ஆணைப்படி)

க.பணீந்திர ரெட்டி,
அரசுச் செயலாளர்.

<u>பெறுநர்</u>

நகராட்சி நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை–600 005.
மாவட்ட ஆட்சித் தலைவர், நாமக்கல் மாவட்டம்.
முதன்மைச் செயலாளர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை – 600 005.
சேலம் மண்டல நகராட்சி நிர்வாக இயக்குநர், சேலம் மாவட்டம்.
நகராட்சி ஆணையர், நாமக்கல் நகராட்சி.

<u>நகல்:-</u>

மாண்புமிகு அமைச்சர், நகராட்சி நிர்வாகம், ஊரக வளர்ச்சி, சட்டம், நீதிமன்றங்கள் மற்றும் சிறைச்சாலைகள் துறை அவர்களின் முதுநிலை நேர்முக உதவியாளர், சென்னை– 600 009.
வருவாய்த்துறை / நிதித்துறை, சென்னை – 600 009.
செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை அவர்களின்முதுநிலை தனிச் செயலர், சென்னை–600 009.
உள்ளுறை தணிக்கை அலுவலர், தலைமை கணக்காய்வு அலுவலர் அலுவலகம், (பொது (ம) சமூகத் தணிக்கை) சென்னை–600 009.
நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (அந2) துறை, சென்னை– 600 009.

இருப்புக் கோப்பு/உதிரி நகல்.

//ஆணைப்படி அனுப்பப்படுகிறது//

24/9/13
பிரிவு அலுவலர்.
24/9/13